# மாடும் வீடும்



மல்லிகை சி. குமார்

# மாடும் வீடும்

(கவிதைத் தொகுதி)

## மல்லிகை சி.குமார்

கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம்.
"தொழிலாளர் பொழில்"
88/2 டன்பார் வீதி,
அட்டன்.

# மாடும் வீடும்

(கவிதைத் தொகுதி)

| | |
|---|---|
| ஆசிரியர் | -மல்லிகை சி.குமார் |
| உரிமை | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | மே 1995 |
| பிரதிகள் | 1000 |
| விலை | **50/-** |
| தொகுப்பு | அந்தனி ஜீவா |
| வடிவமைப்பு | எல். சண்முக நாதன் |
| வெளியீடு | கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம்<br>"தொழிலாளர் பொழில்"<br>**88/2,** டன்பார் வீதி. அட்டன் |
| அச்சிட்டோர் | பிரதீப் பப்ளிகேசன்<br>486/33, புளூமெண்டால் வீதி,<br>கொழும்பு-13 |

## MADUM VEEDUM

(Collection of Tamil Poetry)

| | |
|---|---|
| Author- | MALLIKAI C.KUMAR |
| FIRST EDITION | MAY 1995 |
| Copies | 1000 |
| Price | 50/- |
| Copy Right | Author |
| DTP By | Thas, Jeeva. |
| Design by | L; Shanmuga nathan |
| Publisher by | **CHRISTIAN WORKERS FELLOWSHIP**<br>"KAMKARU SEVEANA"<br>88/2 Dunbar Road, Hatton |
| Printed by | **Predeep Publication**<br>486/33 Bleomendhal Road,<br>Colombo-13 |

# கவிப்பேரரசு வைரமுத்துவின் அணிந்துரை

மல்லிகை சி.குமாரின் "மாடும் வீடும்" படித்து
ஒரு மாலைப்பொழுதை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டேன்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதால்
வாசகர்களுக்கு, கவிதைப் பிரியர்களுக்கு
இந்நூலைப் பரிந்துரை செய்கிறேன்.

வாசகர்களைத் தன்னுள் கரைத்துவிடும் சக்தி
இதிலுள்ள ஒவ்வொரு கவிதைக்குமிருக்கிறது.

அலங்காரங்களுக்காகக் கவிதை எழுதும் கவிஞர் மத்தியில்
உணர்வு பூர்வமாகக் கவிதை வடித்திருக்கிறார் மல்லிகை
சி.குமார்.
ஒரு சில கவிதைகளில் வாழ்க்கை எங்கோ ஓரிடத்தில்
ஒட்டிக் கொண்டிருக்கிறது.
பல கவிதைகளில் வாழ்க்கை அங்கங்கே ஒட்டிக்
கொண்டிருக்கிறது.
மீதமுள்ள கவிதைகள் வாழ்க்கையாகவே இருக்கின்றன.

ஆயிரம் கிளிஞ்சல்களுக்கு மத்தியில் ஒரு சிப்பியும்
ஆயிரம் சிப்பிகளுக்கு மத்தியில் ஒரு முத்தும்
ஆயிரம் முத்துக்களுக்கு மத்தியில் ஓர் இடம்புரிமுத்தும்
ஆயிரம் இடம்புரி முத்துக்களுக்கு மத்தியில்
ஒரு வலம்புரி முத்தும் கிடைக்கும் என்பார்கள்.

குமாரின் கவிதைகள் அனைத்தும் வலம்புரி முத்துக்கள்.

அரசியல்வாதிகள் ஏன் பொதுமக்களை ஏறெடுத்துப்
பார்ப்பதில்லை என்பதற்கு இங்கே குமார் காரணம்
சொல்கிறார்:

"இது உண்மையிலேயே
எங்கள் தவறுதான்
நாங்கள் போட்ட
பூமாலைகள் தான்
அவர்களை நிமிரவிடாமல்
தடுக்கின்றன"
என்ன நிதர்சனமான உண்மை!

மலைவாழ் மக்களின் திருவிழா நேரம் அற்புதமான படைப்பு 'கறுப்புக் கூரைகள்'– என்றொரு கவிதை

" அரசன் இங்கு
ஆண்ட போது
ஆனது ஏதுமில்லை
லாபத்திற்குக்
குளிர்காயவரும்
தனியாரால்
மட்டுமா
வந்து
தாங்கப்போவுது?"

என்ற வரிகளைப் படித்தபோது என் மனக்கண்ணில் நீர் கசிந்தது.

மகாகவி பாரதியை– அவனுடைய அக்கினிக்குஞ்சைத் தேக்காட்டுக்குள் எடுத்து வரச் சொல்கிறார் குமார்.

ஏன் எதற்கு என்பதுதான் அந்தக் கவிதையின் சிறப்பம்சம்.

'தீபாவளிப் பட்டம்– சிந்திக்கத் தெரியாதவனைக் கூடச் சிந்திக்க வைக்கும்.

பஜனை கீதம் மாற்றி எழுதப்படும்– குமாரை இனங்கண்டு
கொள்ளக்கூடிய கவிதைகளில் இதுவும் ஒன்று.

குமாரிடம் நல்ல சொல்லாட்சி இருக்கிறது

உடன் வெதியநிலா பெரும்பாலும் கரைந்து போவது–என்று
ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

வெதியநிலா என்பதை நான் மிகவும் ரசித்தேன்.

இப்படி மேற்கோள்கள் சுட்டிக்காட்ட ஆரம்பித்தால்
அனைத்துக் கவிதைகளையும் மீண்டும் எழுத வேண்டும்.

மனப்பாடம் செய்யாமலேயே மனதில் வந்து ஒட்டிக்கொள்வதுதான்
நல்ல கவிதை. அந்த வகையில் நல்ல கவிதைகளை மட்டுமே தந்த
நல்ல கவிஞர் மல்லிகை சி.குமாரை நான் தமிழ் கொண்டு
வாழ்த்துகிறேன்.

இலக்கியத்தைப் பெருமைப்படுத்தும்
இலக்கிய வாதிகளின் பட்டியலில்
இந்த ஈழத்துக் கவிஞருக்கு
நிலையானதொரு இடமுண்டு.

வாழ்த்துக்களோடு...

வைரமுத்து

கவிஞர் வைரமுத்து

# வாழ்த்துரை

மலையகத்தின் சிறுகதை எழுத்தாளர்களுள் இன்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவராக மல்லிகை சி. குமார் திகழ்கிறார்.

எமது வெளியீடான கொந்தளிப்பில் இவரது சிறுகதைகள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளதோடு இலங்கையின் தேசிய தினசரிகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி போன்றவற்றிலும் மற்றும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

மலையக சிறுகதை இலக்கியத்துக்கு பெருமை சேர்த்து கொண்டிருக்கும் நண்பர் குமார் யதார்த்தங்களை தமது எழுத்துக்களில் எடுத்துக்காட்டி முத்திரை பதித்துள்ளார்.

மலையகத்தில் அண்மைக்காலத்தில் இரண்டொரு கவிதைகளை எழுதியவர்களின் கவிதைகள்கூட விமர்சிக்கப்பட்டு இலக்கிய ஆய்வுக் குறிப்புகளில் இடம் பெற்றுள்ளன. ஆனால் கால் நூற்றாண்டு காலமாக மலையக மக்களின் குமுறல்களையும் அவர்களின் அபிலாஷைகளையும் கவிதைகளாக எழுதிக் குவித்துள்ள கவிஞர் குமாரின் கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்படாமல் ஏனோ தானோவென்று நோக்கப்பட்டுள்ளமை வேதனையைத் தருகின்றது.

எதற்கும் அடிமையாகாமல் தனக்கென ஒரு கொள்கையோடு, தனிப்பாணியில் அஞ்சா நெஞ்சத்துடன் அழுத்தத் திருத்தமாக எடுத்துக் கூறுவதில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் நண்பர் குமார் என்றால் இதை எவராலும் மறுப்பதற்கில்லை.

குமாரின் திறமையை மதித்து அவருக்கு இந்து சமய, இந்து கலாச்சார அமைச்சு 1993ல் 'தமிழ் மணி' பட்டமளித்துகௌரவித்தமை பொருத்தமானதாகும்.

வெறும் பொழுதுபோக்கு எழுத்தாளராக மட்டும் குமார் இருந்ததில்லை. அவரின் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் மலையக வரலாற்றின் ஒவ்வோர் அத்தியாயங்களாகும். இனிமேல் அவர் எழுதும் அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் மலையகத்தின் நிலையைப் படம் பிடித்துக்காட்டக் கூடியதாக விளங்க வேண்டும்.

அந்த முயற்சியில் இடைவிடாது தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அவரின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

அன்புடன்
மு. நேசமணி
ஆசிரியர் கொந்தளிப்பு

லெமிலியர் தமிழ் வித்தியாலயம்
தலவாக்கொல்லை

## “உள்ளத்துள்ளது கவிதை
## உண்மை உருவெடுப்பது கவிதை

**உங்களுடன்....**

என் அன்னை தன் தோளில்
கூடை சுமக்க
என்னை அன்னையின்
வயிறு சுமக்க....
மேடு பள்ளம்
கானுக் கட்டை

அவளின் தாண்டலும்
தவிப்பும்
விம்மலும் வேதனையும்
வெளிப்படும் பெருமூச்சும்
நிர்வாக அதட்டலும்
அடக்கு முறைகளும்

அரிதாரம் பூசி
அலங்கார வார்த்தைகளால்
உண்மைகளை
மூடி மறைத்த தகுதியற்ற
தலைமைகளும்
அரசியல் மோசடிகளும்
அவளை மட்டுமல்ல...
கருவறை சிசுவான
என்னையும்....
என் சமூகத்தையும்
அன்று பாதித்தது.
இன்று
நான் அப்பாவான பிறகும்
என்மகன் முதல் அனைவருக்கும்
அதே பாதிப்புதான்



காலங்கள் ஓடியும்
காயங்கள் ஆறாத நிலை.

ஆறியது போலிருக்கும்
தழும்பைக்கீறி
மீண்டும்
ரணமாக்கும் தலைமைகள்
தலை எடுக்கின்றனவே
தவிர
ரணத்தைக் குணமாக்கும்
திட்டங்கள் நடக்கவில்லை.

நான் இலக்கியத்திற்குள்
நடக்கத் தொடங்கியபோது
சிறுகதையின்
சேலைத்தலைப்பைப்
பிடித்துக்கொண்டு.... எங்கள்
வேதனையை
வெளிப்படுத்தினேனே தவிர
கவிதை மூலமல்ல...
ஆனால்,
நாங்கள் காயம் பட்ட போதெல்லாம
என் உள்ளத்திற்குள்ளிருந்து
கொப்பளித்ததெல்லாம்
கவிதைகள்தான்!
என் மனக் கொந்தளிப்பை
என் தோழர்களும்
புரிந்து கொள்ள வேண்டும்
என்பதற்காகத்தான்
புதுக்கவிதை சாலை வழியாக
ஓடிப்போய்
அவர்களைத் தொட்டேன்.

என் கவிதைகளை
தொட்டுப் பார்த்தவர்கள்
அடுத்தவர் மனதிலும்
ஒட்டி வைத்தார்கள்.

கிழித்தெடுத்துப் பார்த்த சிலர்
எரிந்து போய்
என் மீதே -விழுந்ததுமுண்டு
"என்னைச் சுட்டுவிட்டான்" என்று.

இக்கவிதைகள்
இவ்வளவு சீக்கிரம்
தொகுப்பாகுமென்று-நான்
எண்ணவேயில்லை
நான் தூண்டில் போட்டு
வைத்திருந்ததெல்லாம்
என் சிறுகதை தொகுப்பிற்குத்தான்
ஆனால்,
என்மீது
அக்கறைக் கொண்டு
சிதறிக்கிடந்த- என்
கவிதைகளை சேர்த்தெடுத்து
சிரமங்களை பெரிது படுத்தாத
பெருமனதோடு- என்படைப்பை
முதல் தொகுப்பாக்கும்
முயற்சியில் இறங்கிய-
என் அன்பிற்கினிய
மோகன் சுப்பிரமணியம் அவர்களுக்கும்
மு. நேசமணி அவர்களுக்கும்
நான் கடமைப்பட்டுள்ளேன்
என் படைப்பு
தொகுப்பாக வரவேண்டும் என்பதில்

என்னைவிட
அக்கறைக் கொண்டு
கவிதைகளைத் தொகுத்து
முழு ஒத்துழைப்பும் நல்கிய
என் அருமை
தோழர். அந்தனி ஜீவா அவர்களுக்கும்
என் மனமார்ந்த நன்றி !
என் முகந்தெரியாது-நண்பர்
அந்தனி ஜீவா மூலம்
என் கவித்துவங்கண்டு
என்னை இனங்கண்டு
அள்ளி எடுத்த கவிதைகளை
தரம் பார்த்து
இவை வலம்புரி முத்துக்கள் என
தமிழ் கொண்டு வாழ்த்தும்
கவியரசு வைரமுத்துவின்
வைர வரிகள்
எனக்கு மட்டுமல்ல- இங்கே
எரிகின்ற எங்களின் பிரச்சினைகளை
எழுதி எடுத்தியம்பும்
எழுத்தாளர்களுக்கும் கிடைத்த
வலம்புரி வாழ்த்துக்கள் என
பெருமை படுகின்றேன்.
இத்தொகுப்பு வெளிவர
உதவிய கரங்களுக்கும்
கிறிஸ்தவ தொழிலாளர்
சகோதரத்துவ ஸ்தாபனத்துக்கும்
என் நன்றி .



அரச மிருக வைத்தியசாலை
தலவாக்கலை
25-05-95

உங்கள் அன்பின்
மல்லிகை சி.குமார்

# பதிப்புரை

1958ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவத் தொழிலாளர் சகோதரத்துவம் 1973ஆம் ஆண்டில் மலையகத்தில் தனது பங்களிப்பை செலுத்தத் தொடங்கியது.

இலக்கியத்துறைக்கு கி.தொ.ச வழங்கிய ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும். 1976ஆம் ஆண்டு முதல் “கொழுந்தளிப்பு” வெளிவந்தது. இத்தொகுதி பின்னர் “பிபிதென பெய” என்ற பெயரில் சிங்களத்திலும், FOR THE DAWNING OF THENEW என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளிவந்தன.

குறிஞ்சி தென்னவன், இஸ்மாலிகா, குறிஞ்சி நாடன், பானா தங்கம் போன்றவர்களின் ஆக்கங்கள் “ விழிப்பு” தொகுதியில் வெளியாகி இருந்தன. அச்சஞ்சிகையில் மல்லிகை சி. குமாரின் சிறுகதை ஒன்றும் இடம் பெற்றிருந்தது.

“மாடும் வீடும்” என்ற மல்லிகை சி. குமாரின் கவிதைத் தொகுதியை எமது வெளியீடாக பிரசுரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

விடுதலை, நீதி, மகிழ்ச்சியான வாழ்க்கை, அமைதி மற்றும் சமாதானத்திற்காக மக்கள் ஏங்கி தவிக்கும் நிலை தொடர்கிறது. இம்மக்களின் போராட்ட உணர்ச்சிகளையும் அவல வாழ்வையும் குமார் தனது கவிதைகளில் வடித்துள்ளார்.

தொழிலாளர் வர்க்கத்தின் சித்தாந்தமானது“ உழைக்கின்ற ஒடுக்கப்படுகின்ற பெருந்திரளான மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்குகின்ற வளர்ச்சி அடைந்ததான பாட்டாளி வர்க்கம்தான் தனது விடுதலைக்கான போராட்டத்தில் முன்னணி பாத்திரத்தை வகிக்க முடியும் ” என்கிறது.

அத்தகைய மலையக பாட்டாளி வர்க்கத்தில் இருந்து வெளிக்கொணரப்படும் இக்கவிதைத் தொகுதியானது, மலையக பாட்டாளி வர்க்கம் மற்றும் அறிவு ஜீவிகளையும் சிந்திக்க அழைப்பு விடுகிறது.

மலையகத்தில் மக்கள் நிறுவனங்கள், நூலகங்கள், பாடசாலைகளில் அவசியம் இருக்கவேண்டிய கவிதைநூல் “மாடும் வீடும்.” வாசக நெஞ்சங்களின் ஆதரவு மேலும் இத்தகைய படைப்புக்களை வெளியிட எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தருமென்று எண்ணுகிறேன்....

பி.மோகன் சுப்ரமணியம்
இணைப்பாளர்
கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. எங்கள் தவறுகள் | 13 |
| 2. இது திருவிழா நேரம் | 15 |
| 3. கறுப்புக் கூரைகள் | 19 |
| 4. அசோகவனத்தை நேசிக்கிறோம் | 22 |
| 5. முழங்கட்டும் உன் முரசு | 25 |
| 6. உங்கள் முகவரிகள் | 28 |
| 7. தீபாவளி பட்டம் | 31 |
| 8. இராமனின் கேள்வி? | 34 |
| 9. சி.வியின் வீடற்றவன் | 35 |
| 10. உங்களை நம்புகிறோம் | 38 |
| 11. மயங்காதே! | 41 |
| 12. பாரதியே உன் சாயல் குறிஞ்சியில் | 44 |
| 13. அக்டோபர் பூக்கள் | 47 |
| 14. கல்லறையும் களவாகும் | 50 |
| 15. நாங்கள் முட்கள் | 51 |
| 16. மாடும் வீடும். | 52 |
| 17. வடை இழந்த காகம் | 55 |
| 18. யார் இந்த நளன்? | 57 |
| 19. பஜனை கீதம் மாற்றி எழுதப்படும். | 58 |
| 20. இன்று ஒரு சபதம் எடு. | 62 |
| 21. கோலங்கள் மாறும். | 66 |
| 22. இந்த ஆடுகள் நனைய | 70 |

# எங்கள் தவறுகள்

எங்கள் தோட்ட
அம்மன்
கோவில் முகப்பில்
அல்லது மைதானத்தில்
இன்று கூட....
எத்தனைக் கொடிக்கம்பங்கள்
சாயமெல்லாம்
வெளுத்துப் போன
அல்லது மங்கிப்போன
அந்தக்கட்சி கொடிகள்
எங்களுக்காகத்
துயரப்படுவது போல அதோ......
வெள்ளைக் கொடிகளாய்
வீசும் காற்றில்
பறக்கின்றன
'மகாத்மா காந்திக்கு!'
தொண்டை கிழிய
ஒருவன் போட்டக் கூச்சலுக்கு
பின்னால்
நாங்களெல்லாம் ஒருமித்து
'ஜே!!' போட வாய்திறந்த
காலம் முதல்....
எத்தனையோ பேருக்கு
எங்களுடன் சேர்ந்து
அதோ.... அந்த மலைகளும்
ஜே! போட்டு ஆர்ப்பரித்தன.
சிலரை
மலையக மன்னர்களாய் ஆக்க
மலர்க் கிரீடம் சூட்டினோம்
இவர்களின் கொடிக் கம்பங்களை
சுமந்து சுமந்து



ஆம் எங்களின் முதுகு
கூன் விழுந்ததற்கு
நிச்சயமாய்
இதுவும் காரணந்தான்
நாங்கள்
யார்யாருக்கு கொடி சுமந்து
கட்சி ஊர்வலத்தில்
கரடி வேஷம்
போட்டு கொண்டு
'தமாஷாக' ஆடினோமோ....
அவர்கள் எல்லாம்
உண்மையாகவே
நரிகளாக மாறிவிட்டார்கள்
அவர்கள் - இப்பொழுது
எங்களை யெல்லாம்
நிமிர்ந்து பார்க்கவில்லை என்று
நாங்கள்
கவலை கொள்கிறோம் பூ....!
இது உண்மையிலேயே
எங்கள் தவறுதான்
நாங்கள் போட்ட
பூமாலைகள் தான்
அவர்களை நிமிரவிடாமல்
தடுக்கின்றன
நாங்கள் எதிர்பார்ப்பது
சுதந்திரமாக
எங்கள் அடுப்பு
எரிய வேண்டும் என்பது,
ஆனால்....
நாங்கள் நம்பிக்கையோடு
பொறுக்கி எடுத்த
காய்ந்த விறகோ
படு... பச்சையாய் இப்பொழுது
மாறி விட்டதே....?



# இது திருவிழா நேரம்

வரண்ட வாழ்வு
தன்வாழ்வு என்றாலும்
நாட்டை
வளமாக்கும்
தேயிலைச்செடி வாட
பொறுக்குமா
இந்த
மலைவாழ் மக்கள்
நெஞ்சம்?

அதனால்தான்
மழை வேண்டி
மாரிக்கு திருவிழாவோ...?

மழைக்கே பொருளான
மாரியைக் குளிர வைக்க
ஏழை மனதுக்குள்
எத்தனை...... எத்தனை
குதுாகலங்கள்

மாரிக்கு மட்டுமா
திருவிழா....
இளம் மயில்களுக்கும் தான்
அட....
நடைகூட
நாட்டியமாக
தெரிகிறது
கைவீசி
நடக்கையில்
கை வளையல் ஓசை கூட





மல்லிகை சி.குமார்

இன்று
கவிதையாக இருக்கிறது.

வேர்க்க
விறுவிறுக்க
தேயிலைக் காட்டுக்குள்
பெரும் பொழுது
கழிக்கும்..... இந்த
சிட்டுகளுக்கெல்லாம்
இன்றுதான்
சுதந்திர தினமோ....?

வானத்து முழு நிலவு
நட்சத்திரத்தோடு
பூமிக்கு வந்தது போல்
மாவிளக்கு ஏந்தி
தோட்ட நிலாக்கள்
மாரி சந்நிதிக்கு
போவது
தனியழகு இல்லை...
வளைந்து போகும்
ஒரு நதியின் அழகு

ஆலய முற்றம்
அலங்கார
விளக்குகளால் மட்டுமா
அழகு பெறுகிறது?
இந்த
அழகு நிலாக்களின்
வருகையாலும் தான்

ஒலிவாங்கியில்
இளங் குயில்களின்



கானங்கள்
அரங்கேறுவதும்
இத்திருநாளில் தான்
வாய்மொழி
இலக்கியம்
மறையாது–இங்கே
கட்டிக்காப்பதும்
இந்தக் கானக்குயில்கள்தான்
அதோ
தேரில்
வருவது
மாரி என்றால்
பின்னால் 'குலவை'
பாடி வருவதெல்லாப்
ராக தேவதைகள்தான்

பூமிக்கு
தாலாட்டுப் பாடும் மாரிக்கே
இங்கு
தாலாட்டு பாடப்படுகிறதே..
மஞ்சள் நிலாக்கள்
மஞ்சள் நீர்
கலயத்தோடு
மறைந்திருப்பது
மாமன் மகனை
நனைப்பதற்கு மட்டுமல்ல
மனங்கவர்ந்த
எவனையும்
நனைக்க வேண்டும்
என்று தான்
இந்த மான்கள்
வலை விரித்து நிற்கின்றன.



வானத்து நிலா
குளிர் ஒளியைத்தான்
தருகின்றது
இந்த
கன்னிநிலாவும்
முழுக்க
நனைந்து விடும்
நீருற்ற வந்த
மழை மேகத்தையே
நனைத்த பெருமையில்
குளிர்ந்தே போகும்
இந்த குமரர்கள்
நெஞ்சம்.

எனவே....
மாரிக்கு மட்டுமல்ல....
எங்கள்
மயில்களுக்கு
இதுதான் திருவிழா
இவர்களுக்கு இதுதான்
சுதந்திர நாள்.





# கறுப்புக் கூரைகள்

இந்த ஜனனம்
மாடத்திலோ
எழில் கூடத்திலோ
அல்ல....
எட்டுக்கும்
பத்துக்குப்
இடைப்பட்ட அடிகள்
அதுவே
இவர்கள்
ஜனனித்த கூடு
அடிக்கொரு ஜீவன்
படுக்க முடியும்?
இதற்குள்தானே
இவர்களின்
காமம், வாழ்வு
சாவு சடங்கெல்லாம்
புராதன
சின்னங்கள்
இங்கே
போற்றி
பாதுகாக்கப்படலாப்
அதற்காக
ஓட்டைக் கூரைகள்
சிதைந்த லயங்கள்
இன்றும்
நிலைக்க வேண்டுமோ?
நவீன வீடுகள்
இவர்களுக்கு கானல் நீராய்



இருக்கும் போது
மழை நீரல்லவா
படுக்கையை
குளிர்ப்படுத்துகின்றது
தனியார்
மாப்பிள்ளைகள்
தோட்டங்களைப்
பெண் பார்க்க
வந்தபோது
சாலை ஓர
பாறைக்கெல்லாப்
சடங்கு சுற்றி
அழகுப்
படுத்தப்பட்டது
ஆனால்...
பூப்பெய்த
பிள்ளையை
புறம்பாக வைக்க
இல்லையே
இடமென்று......
தவிப்புக்கொள்ளும்
நெஞ்சங்கள்
அந்த
கறுப்புக்
கூரைக்குள்,
இங்கே....
தந்தத்தைப்
பாதுகாக்க
தங்கத்தாலும்
கூரை உண்டு
நாட்டை




மல்லிகை சி.குமார்

தங்கமயமாக
மாற்ற நாளும்
உழைக்கும்
இந்த
தங்கங்கள்
வீட்டுக்கு மட்டும்
ஏன் இன்னும்
ஓட்டைக் கூரை?
சின்னஞ்சிறு
சிட்டுக் கூட
கூடு கட்டி
முட்டையிடும்
இங்கு
பேரனுக்கு
பேரன் வந்தும்
எந்தக் கூடும்
சொந்தமில்லை.
சொந்தமாகும்
'வீடும்' என்று
சொல்வதெல்லாம்
சொப்பனமோ
அரசன் இங்கு
ஆண்ட போது
ஆனது ஏதுமில்லை
லாபத்திற்கு
குளிர்காய வரும்
தனியாரால்
மட்டுமா
வந்து
தாங்கப் போவுது?





மல்லிகை சி.குமார்

# அசோக வனத்தை நேசிக்கிறோம்!

சீதை மட்டுமா
இங்கு
கொண்டு வரப்பட்டாள்
நாங்களும்தான்!

சீதையை மீட்க
ராமன் வந்தான்
எங்களை மீட்க
ராமனுஜம் வந்தான்.

எங்களில்
பாதியை மீட்ட
ராமனுஜத்தால்
ஏன் மீதியை
மீட்க முடியவில்லை.

கடவுச் சீட்டின்
கடைசித் தேதிப்படி
நாங்கள் என்றோ
காலாவதியான ஜென்மங்கள்!

கப்பலே ஓடாதபோது
கடலைத் தாண்டவில்லை
என்ற குத்தலுக்கு ஆளான
குற்றவாளிகள்.

தண்டனையாய்
எங்களுள் பலருக்கு
வேலை நிறுத்தப்பட்டு
பட்டினியே
விநியோகிக்கப்படுகிறது.



கடல் நீரை
காணும் முன்னே
கையிருப்பை எல்லாம்
கரைத்து விட்டு
நிற்குமிவர்கள்....

இடுப்புச் சேலையும்
உரியப்பட்ட
பாஞ்சாலியாய்
ஆக்கப்பட்டு விட்டார்கள்
இவர்களைக்
காக்க வேண்டிய
கண்ணன்கள் கூட
கையை கட்டியவாறு
அந்த
கௌரவர்களுக்குப் பின்னால்
கர்ணனாய்
நிற்கிறார்கள்!

இந்த கர்ணன்களால்
ஈட்டில் இருக்கும்
எங்களின்
கடவுச் சீட்டைக்கூட
மீட்டுத்தர முடியாதே
பின் ஏன்....

புஸ்பக விமானமும்
சில பொற்காடுகளும்
தயாராய் இருக்கிறது.
என தண்டாராப்
போடுகிறார்கள்!



வேண்டாம்
எங்களுக்கு
அயோத்தி வேண்டாம்.
இந்த நாட்டிற்கு
விசுவாசமாக இருப்போம்
என சத்தியம் செய்ய
ஆசைப்பட்டு

நாங்களும் ஒருகாலம்
மனு போட்டோம்
ஆனால்
நிராகரிக்கப்பட்டு விட்டோமே
இருந்தும்
இந்த மண்ணை
நேசிக்கின்றோம்........

எங்களின் கால்கள்
இந்த மண்ணிலேயே
வேர் பிடிக்க
ஆரம்பித்து விட்டன.
இந்த.
அசோக வனத்திலேயே
நாங்கள் கால்களை
ஊன்றிக் கொள்கிறோம்

அந்த
அயோத்திக்குப் போய்
அந்த
ராமர்கள் முன்னால்
எங்களால்
தீக்குளிக்க முடியாது



# முழங்கட்டும் உன் முரசு

பாரதியே
இது உன்
விழாக்காலம்
உந்தன்
எத்தனையோ
கனவுப் பூக்கள்
நிஜமாகவே
மலர்ந்து
கொண்டிருக்க
இந்த
ஊமைச் சனங்களின்
எந்தக் கனவும்
இங்கே
நனவாக
மறுக்கிறதே?
கரு மூட்டங்கள்
முக்காடாகி
இவர்கள் வாழ்வை
இருட்டாக்க
கதிரொளி கூட
உட்புக அஞ்சுதோ....?
நீ
அஞ்சாதவன்
உன்
அக்கினிக் குஞ்சை
எடுத்துவா
இங்கே!
காட்டைச்
சுட்டெரிக்க அல்ல
தேக்காட்டுக்குள்





மல்லிகை சி.குமார்

மூண்டிருக்கும்
இருளகற்றி
ஒளி படைக்கத்தான்
ஒருமைப் பாட்டிற்காக
நீ கொட்டிய
முரசையும்
கொண்டு வா
கையோடு
இங்கே
மனித நேயத்தை
நேசிக்க மறந்த
பலரின் செவிக்குள்
பாயட்டும்
நீ முழங்கும்
முரசின் ஓசை
ஒன்று பட்டால்
உண்டு வாழ்வு
என
உறவுக்கரம்
நீ நீட்ட
இங்கோ...
உள்ளுக்குள்
இருக்கும்
உறவுப் பாலத்தில்
தான்
எத்தனை
ஓட்டைகள்
இங்கே
சமாதானத்திற்காக
பறக்கவிடும்
வெண்
புறாக்கள்
பயனற்றுப் போவதால்



எங்கே....
உன்
வெண்
தலைப்பாகையை
கொஞ்சம்
அவிழ்த்துக் கொடு.
சமாதான
வெண்
பதாதையாக
பறக்கட்டும்
உன் தலைப்பாகை
அதற்காக
நீ
உன்
கறுப்புப் கோட்டை
கழற்றித் தராதே
ஏற்கனவே
இருட்டுக்குள்
விடப்பட்ட
இவர்கள்
ஒளியை
எதிர் பார்ப்பதால்
நீ
அக்கினி
குஞ்சோடு வா
ஒளிக் கீற்று
பரவட்டும்
உன்
முரசும்
முழங்கட்டும்





மல்லிகை சி.குமார்

# உங்கள் முகவரிகள்

மூழ்கிக்கொண்டிருந்த
உங்கள்
முகவரியை
மேலே தூக்கி
வெளிச்சம்
போட்டு
காட்டியது
எங்கள்
ஓட்டுக்கள்தான்.

சரமாய் நின்று
நாங்கள் போட்ட
ஓட்டுப்பூக்கள் தான்
உங்கள்
அனைவரின்
கழுத்துக்கும்
இத்தனை
மாலைகளைத்
தேடித்தருகின்றன.

இன்று
எந்த
மேடைக்கும்
நீங்கள்தான்
அலங்கார
பொருளாக
அமர்த்தப்படுகிறீர்கள்.

நீங்கள்
அமர்வதற்கு



தங்கள்
தோள்களைக்
கதிரைகளாகக்
கொடுக்கும்

துதி பாடிகள்
இருக்கும் வரை
மரண வீட்டில்கூட
உங்களுக்கு
மாலைகள்
கிடைக்கும்

உங்களால்
லாபம் பெறும்
போலிகள்
உங்கள்
ஆசிக்காகவே
பாதம் பணிந்து
மலர்கள்
போடலாம்
அந்த
ஆயக்கால்கள்
மட்டும்
உங்களுக்கு
வாக்குப்
போடவில்லை

உங்கள்
ஆசனத்திற்கு
அஸ்திவாரமாய் இருப்பது
எங்கள் வாக்குகள்தான்
எனவே



பல்லக்கில்
நீங்கள்
பவனி
போகும்போது
எங்களையும்
கொஞ்சம்
எட்டிப்பாருங்கள்

செய்தோம்
என்பதை விட
நீங்கள் இங்கே
செதுக்க வேண்டிய
பாறைகள்
எத்தனையோ...

ஆகவே
மாலை வாங்க
மேடை
ஏறுவதிலும் பார்க்க
மலைகளிலும்
கொஞ்சம்
ஏறிவாருங்கள்

அதற்காக
எங்கள்
கூத்தில் வந்து
கோமாளித்தனம்
காட்டுங்கள்
என்று
சொல்லவில்லை.

நீங்கள்
வாங்கிய
வாக்கிற்கு
நன்றிக் கடனாக
ஏதாவது செய்யுங்கள்

இல்லையேல்
உங்கள்
முகவரிகள் கூட
முகம் தெரியாமல்
மூழ்கடிக்கப்படும்





மல்லிகை சி.குமார்

# தீபாவளி பட்டம்

இந்த தீபாவளிக்காக
அதிகாலையில்
காட்டருவி குளிர் நீரில்
கங்கா ஸ்நானம் செய்யும்
எங்களின்
கன்னியர் அழகை

மலைமதிலைப் பிடித்து
கள்ளத்தனமாய்
எட்டிப்பார்க்கும்
கதிரவன்
இலவசமாய்
தன் ஒளியால்
இவர்களுக்கு
மஞ்சள் அல்லவா
தேய்த்து விடுகிறான்

ஆனால்
நாங்களோ...
உச்சித் தலைக்கு
தேய்க்கும்
எண்ணை விலை உயர்வால்
இடிந்து போய்
நிற்கிறோம்
எண்ணை மட்டுமா
எல்லாமே
விலை உயர்வு தான்.



எங்களின் வாசலில்
இன்னும் பட்டாசு

வெடிக்க வில்லைதான்
ஆனால்
எங்களின் இதயம்
விலை உயர்வால்
வெடித்துக்
கொண்டிருக்கிறதே!
அட எங்களின்
பண்டிகை காலத்தில் மட்டும்.

ஏன் இந்த
விலை வாசிப்பட்டம்
இவ்வளவு
உயரப்பறக்கிறது?
ஏய் சூரியனே
நீயே அண்ணார்ந்து
பார்க்குமளவுக்கு
இன்னும் இந்த
பட்டம் உயருமோ?

கோடுகள்
குழிகளாக்கப்படுவதால்தான்
எங்களுக்கு
இந்த குமுறல்....!
எனவே...

பட்டாடை வாங்க
முடியாத நாங்கள்
ஒரு
புத்தாடையாவது
வாங்க உண்டா வசதி ?



அட
உயரப் பறந்து
கொண்டிருக்கும்
விலைவாசிப்பட்டமே
எங்களுக்காக
நீ கொஞ்சம்
தாழப் பறக்கக் கூடாதா?

உன்னை
மேலே உயர்த்திக்
கொண்டிருப்பவர்கள்
எங்களை

படு பள்ளத்திலல்லவா
தள்ளிக்
கொண்டிருக்கிறார்கள்!

கண்டிப்பாக
நாங்கள்
ஒரு காலம் மேலே
எழுவோம்!
பட்டமே
உன்னையும் உன்னை
இயக்குபவர்களையும்
நாங்களும்
பள்ளத்தில்
இறக்குவோம்
அன்று
உண்மையில்
தீபாவளி எங்களுக்குத்தான்!!





மல்லிகை சீ.குமார்

# இராமனின் கேள்வி?



மானே....
மாயத்தனங்காட்டும்
மானே
என்
மனைவி முன்னால்
நீ
பொன்நிறங்காட்டி
அவளை
மயக்கப் பார்க்கிறாய்?
அட
மாரிஸ மானே...
கட்டிய சேலையோடு
என்னுடன்
கானகம் வந்த இவள்
மாற்றுடையின்றி
இருக்கும்போது
நீயோ...
பொன்நிற வடிவாக
இப்பெண் முன்னால்
நிற்கிறாயே...?
எங்கிருந்து
நீ
பொன் பெற்றாய்
எவரை சுரண்டி
உன் மேனி அழகுற
பொன் முலாம்
பூசிக்கொண்டாய்
சொல்.....உடனே
எடுத்ததை அவர்களிடமே
திருப்பிக் கொடு
இல்லையேல்
என்
அம்புக் குறி
தப்பாது.



# சி.வி.யின் 'விடற்றவன்'

மக்கள் கவிஞனே
நீ படைத்த
'தேயிலைத்
தோட்டத்திலே'
கொஞ்சந்தூரம்
நடந்து பார்த்த
பிறகுதான்
எங்களின்
விம்மல் வேதனைகளை
அந்நியர் கூட
அறியமுடிந்தது.

மலைகளைப் புரட்டிய
எங்கள்
வரலாற்றுச் சுவடுகளை
உன்
படைப்புகளை புரட்டி
பார்த்த பிறகுதான்
அவர்கள்
பார்த்திருக்க வேண்டும்.
எங்கள் தலையில்
பிரமன் எழுதியதை
நீ
அழித்துப் பார்க்க
ஆசைப்பட்டவன்

அதனால் தான்
எங்களின்
உணர்வுகளை



எல்லாம்
நீ படம் பிடித்துக்
காட்டினாய்
ஆனால்
நேற்று யாரோ
படம் எடுத்து–பாம்பாய்
சீறியதால்
பலியாகிவிட்டதே
உன்
பரம்பரை
வாசஸ்தலம்.
பாதுகாப்பாய்
இருந்த
உன் உடமைகள்
வீதியில் அல்லவா
விரித்துப் போடப்
பட்டுவிட்டன

நீ இருந்து எழுதிய
மேசையும் கதிரையும்
உன்
கை எழுத்துப் பதிந்த
காகித மகுடங்களும்
மண்ணில் விழ
மழை மேகம்
கண்ணீர் விட
கரைந்த
எழுத்துக்கள்
இந்த
மண்ணில் அல்லவா
கலந்து விட்டன.



மாரும் வீடும்

அன்று
தலைநகரில்
நீ
அமரத்துவம்
அடைந்தபோது
நாடெங்கும்
ஊரடங்கு சட்டம்
உச்சக் கட்டம்
உன்
மரணச்சடங்கை
காணமுடியாதவர்கள் பலர்.
நீ வாழ்ந்த
இல்லம்
சென்றல்லவா
துன்பம் பகிர்ந்தனர்.

''கவிஞர் சி.வி
தவழ்ந்த வீட்டை
கலா
பவனமாக்குவோம்
மலைக்குன்றில்
நிறுவுவோம்
நினைவு ஸ்த்துாபி''

சத்தமிட்ட வாய்கள்
இன்று
ஸ்தம்பித்து
ஊமையாகி
விட்டனவோ....?





மல்லிகை சி.குமார்

# உங்களை நம்புகிறோம்

நாங்கள்
செதுக்கிப்
பார்த்தோம்
இதுவரைக்கும் முடியவில்லை

உங்களால்
முடியுமென்று
நம்பிக்கையோடு
எதிர்பார்க்கின்றோம்!

எம்மை
எல்லாம்
ஆட்டு மந்தையாகவே
இன்னமும்
எண்ணும்
அந்த
கொழுத்த மலைகளை
தகர்க்கவும்

தாழ்ந்து
பள்ளமாய்
இருளாய்க் கிடப்பதை
மாற்றி
சமநிலைப்
படுத்தவும்
உங்களால் முடியுமென
நம்பிக்கை
கொள்கிறோம்!

ஏற்கனவே
பலர் மீது



நம்பிக்கை
வைத்தவர்கள் நாங்கள்
அவர்கள்
குதியென
சொன்னதும்
இடுப்புத்துண்டையும்

அவர்களிடம்
நம்பிக்
கொடுத்துவிட்டு
குதித்த நாங்கள்
இன்னும்
நிர்வாணமாகவே
நிற்கின்றோம்.

அவர்களோ...
எங்கள்
இடுப்புத் துண்டுக்கும்
கலர்பூசி
கம்பத்தில்
கொடியேற்றுகிறார்கள்.

நாங்களும்
அண்ணாந்து
பார்க்கின்றோம்
கொடிபறக்கும் அழகை அல்ல
அது
அவிழ்ந்து
விழுந்தால்-எங்கள்
நிர்வாணத்தை
மறைத்துக்கொள்ளலாம் என்று



ஆனால்
உயரப்பறக்கும்
கொடி
இறங்கி வந்து
எங்கள் நிலையை
விசாரிக்கும்
என்ற
நம்பிக்கை எமக்கில்லை.

எங்களின்
இளந்தலைமுறைகள்
நிச்சயம்
உங்களால் முடியுமென்று
நம்பிக்கை கொள்கின்றோம்.

கொழுத்த
மலைகளை
தகர்த்தி
பள்ளமாய்
இருக்கும்
எங்கள் நிலையை
சமப்படுத்தவும்
அம்மண நிலையை
மாற்றியமைக்கவும்
உங்களால்தான்
முடியும்.



மாடும் வீடும்

# மயங்காதே!

நண்பனே
உன் உழைப்பால் - நீ
பருகத் தருவது
தேயிலை மட்டுமல்ல
இத்தேசத்தையும்
சுமப்பவன் நீ!
ஆனால்
அடிக்கடி
உன்னையே நீ
தொலைத்து
விடுகிறாயே?
உன்
ஊதிய நிலா
பெரும்பா லும்
கரைந்து போவது
உன்
இதழ் தொடும்
மதுவால் தானோ...?
இதனால்
கருகிப் போவது
உன் இருதயம்
மட்டுமல்ல
உன் இல்லற
நிலாவும்
கண்ணீரில்
கரைந்து
கொண்டுதானிக்கிறது.
நீ குடித்திங்கு
மயங்கும் போது
பரிதாபம்



நனைந்த
கோணியாய்
சுருண்டு விடுகிறாய்
மதுவில் மட்டுமா
நீ மயங்குகிறாய்?
இல்லையே
நீ மயங்குமளவுக்கு
யார் யாரோ
இங்கு
மகுடி
ஊதுகிறார்களே
உன்
மயக்கநிலை
அவருக்கெல்லாம்
லாபமாய்
இருப்பதால்தான்
அச்சமூக சகுனிகள்
பகடைக் காயாய்
உனை உருட்டி
பலதையும்
ஜெயித்துக்
கொள்கிறார்கள்
உன்
விழிப்பைவிட
உன் மயக்க நிலையே
அவர்களுக்கு
அதிக
பலமாக இருக்கிறது.
இதனால்
எத்தனை எத்தனை
ரகசிய
ஒப்பந்தங்கள்
ஒப்பந்த



வியாபாரத்தில்
நீ
விலைப்பேசப்படும்
விலங்காகி
விடுகிறாய்
பாவம்
பலி ஆடாய் போவது
நீயும்
உன் கூட்டமும்தான்.
நண்பனே
மயக்க நிலையை
உதறித் தள்ளு
உன் விழிப்பு
உனக்கே இங்கு
முக்கியமாவதால்
எழு
நிமிர்ந்து நில்!
உன்
கூட்டத்தை
மலையிலிருந்து
மடுவுக்கு
தள்ளும்நிலை
வந்துவிட்டது
நீயும்
உன் கூட்டமும்
நிமிர்ந்தால்
பகடைக்காயாய்
உங்களை
உருட்டிக்
கொண்டிருக்கும்
சகுனிகளை
மலையிலிருந்தே
உருட்டி விடலாம்!



# பாரதியே உன் சாயல் குறிஞ்சியில்

இந்த
மஞ்சுக் கூட்டங்களின்
அஞ்சலி....

தினமும் இந்த
மலைச் சிகரங்களுக்கு
கிடைக்குதென்றால்
நிச்சயம்....
அந்த சிகரத்தின் வடிவம்,

பாரதியே...
உன் தலைப்பாகையின்
வடிவமாக
இருப்பதால்தான்.
உன் நினைவுகூரும் சாயல்
இங்கே
ஆற்றங்கரை
மணல் மேட்டில்
மட்டுமல்ல அதோ...!

உயர்ந்த மலைச் சிகரத்திலும்,
சீதளக் காற்றை
இங்கே
தினம் சுவாசிக்கும் தொழிலாளி
இழுத்துக்கட்டும்
தலைப்பாகையும்
அணிந்து கொள்ளும்
கோட்டும் கூட
உன்னைத் தான்
நினைவு கூரும்



உன் சாயலில் தான்
விழியும் நிமிர்ந்த மீசையும்
இந்த தோழர்களில்
பலருக்கு உண்டு

இந்த
மலைகள் மீது
தாவணியாய்க் கிடக்கும்
தேயிலையை
தழுவப்போகும் தென்றல்
உன் கவிதைகளை
சொல்லிப் போகுதென்றால்

நிச்சயம்
உன் கவிதைகள்
இங்கே
பரப்ப படுவதால்தான்
வாணி விழாக்
காலத்தில்
மட்டுமல்ல
தினமும்
பாடசாலை வாசலில்
உன் கவிதைகள்தான்
தோரணங்களாகக்
கட்டப்படுகின்றன.

மார்கழியில்
ராமர் பஜனை
உன் நந்தலாலாவை
இசைக்காமல்
இப்போதெல்லாம்
தோட்டங்களில்
பவனி போவதில்லை



உனது
கரும்புத் தோட்டத்தின்
துயரச் சாயல்
இந்த...
கொழுந்து காட்டினிலும்
உண்டு.

உன்னைத் தரிசிக்க
உன் தலைப்பாகை
வடிவங் கொண்ட
சிகரத்தை மட்டுமா
நிமிர்ந்து பார்க்கின்றோம்?
இல்லையே.......

குனிந்து கிள்ளும்
கொழுந்தரும்பில் கூட
உன் கூரிய
எழுதுகோலின் சாயல்
இருக்கத்தான்
செய்கிறது.

எத்தனை..... எத்தனை
இந்த மலைகள் மீது
உனது சாயல்கள்தான் இன்னும்.



# அக்டோபர் பூக்கள்!

எங்களின் தோழிகளில் ஒருத்தியே.......
இடைக் காலத்தில்
நங்கூரமிட்டு
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த
உன் பிரிவு மீண்டும்
நிச்சயிக்கப்பட்டு விட்டது.

ஆழக்கிடந்த நங்கூரம்
நீர் மட்டத்திற்கு மேலும்
உயர்ந்து கொண்டிருக்கிறது.

உறுதியாக்கப்பட்ட
உன் பயணம்
அலைகள் மீதுதான்
ஆரம்பமாகும்
எங்கள்.....
நெஞ்சக் கடலில் மூண்டெழும்
உன் நினைவலைகள்
இன்னும் சிலரை
எங்களுக்கு
இனங்காட்டிக் கொடுக்கும்

தோழியே......!
இந்த மலைகளின் மீது
பல்லக்கு சுமந்த
ஒரு கோத்திரத்தின்
கொடிகள்தான் நாம்

நாம் சுலோகங்களையும்
கொடிகளையும் சுமந்து





மல்லிகை சி.குமார்

முஷ்டிகளை உயர்த்தியதால்தான்
இங்கு ஒரு சிறு
மாற்றத்தையாவது கண்டோம்.
தோழியே...!
உன் போராட்ட உணர்வுகளை
நாங்கள் மதிக்கும் போது....

ஒரு முட்டாள்
உன் அங்க அழகை மட்டும்
கவிதையாய் வடித்த போது
நீ காறி உமிழ்ந்தது
இன்னும் அவன் கன்னத்தில்
ஈரமாக இருக்கிறது.

ஆனால்....
நீ எங்களோடு
சேர்ந்து பாடிய
விடிவுக் காலப் பாடல்கள்
என்றும் மலைகளில்
எதிரொலித்துக் கொண்டே
இருக்கும்.

அந்த பாடலுக்கான விதைகளும்
எம்மாற்றத்திற்கான வழிகளும்
அமைத்துக் கொடுத்த
அந்த அக்டோபர் பூக்கள்
இந்த அக்டோபர் மட்டுமல்ல
எந்த அக்டோபரிலும்
நினைவு கூரு!



நீ
எங்களிலிருந்து
எடுத்துச் செல்லும் விதைகளை
நீ சென்றடையும் கிராமத்து
மனித இதய நிலத்தில்
கொஞ்சமேனும் தூவி விடு!

எங்களின் இதயத்தில்
இவைகளைத் தூவிய
தோழர்களை அவர்களுக்கும்
அறிமுகப்படுத்து
இருளிலிருந்து
ஒளியைத் தேடிய அந்த

அக்டோபர் பூக்களை
இந்த அக்டோபரில் மட்டுமல்ல
எந்த அக்டோபரிலும்
நினைவு கூர்ந்துக்கொள்.





# கல்லறையும் களவாகும்



அன்று
இராமனின்
அம்படிப்பட்டு
மாரிஷ மான்
நிலத்தில்
வீழும்போது
லச்சுமணா!
எனக் கதறியது
இங்கே
லச்சுமணனே
காவல் துறையால்
குண்டடிப்பட்டு நிலத்தில்
வீழ்ந்தபோது
வைக்காதே
எங்கள்
தேயிலை நிலத்தில் கை
என்றான்.
வீழ்ந்தவன் எங்களின்
கொடிசுமந்த தொண்டனென்று
அன்று ஆர்ப்பரித்த
கட்சிகள் எல்லாம்
கதிரைக்காக மட்டும்
யாகம் வளர்க்க
முற்பட்டதால்தான்
இன்று கல்லறை நிலமும்
களவாடப்படுகின்றது



# நாங்கள் முட்கள்

வசந்த
காலத்தில்
பூத்த
ரோஜாவல்ல
நாங்கள்

இலையுதிர்
காலத்தில்
சிலிர்த்து
நிற்கும்
முட்கள்

எங்களின்
முன்னோரை
நீங்கள்
உங்கள்
தேவைகளுக்காக
நிமிரவிடாது
தடுத்தே
வைத்து விட்டீர்
அதனால்
அவர்கள்

கூராய்
இருந்தும்
கூனாய்
இருந்துவிட்டனர்

உயர முடியாது
உதிர்ந்து
போனவர்களின்
உரத்தில்
வளர்ந்த
நாங்கள்
நிச்சயம்
கூனாய்
இருக்கமாட்டோம்.
கூராய்
இருக்கின்றோம்.

எங்களுக்கு
இது
இலையுதிர்
காலம் தான்
சீக்கிரம்
வசந்தத்தை
தேடிக்கொள்வோம்!



# மாடும் வீடும்

இக்
கண்ணபிரான்
இந்திரன்
வாகனத்தில்
வருவார் என்ற
எதிர்பார்ப்பில்
ஏமாற்றம்

ராமாவதாரத்தில்
என்
செருப்பிற்கும்
பர்வதத்தில்
சிறப்புண்டு
பெருமைப்பட்ட
இராமனுக்கும்
சோதனை

பாதுகை சுமந்த
பரதன்கள்
இடம்மாறி
போய்
இடமொன்று
பிடித்ததால்

மானாக
மாறியாவது
சீதை முன்
நிற்கவேண்டிய
நிலை
இராமனுக்கே



மா
டு
ம்

வீ
டு
ம்

இவ்
வேடமாற்றத்தால்
வீமோசனம்
பச்சை வண்ண
இராமன்
நீலவண்ணக்
கண்ணனாய்
ஆயர்பாடிக்கே
மீண்டும்
அதிபதி

மதுராவின்
பிரதிநிதிகளுக்கு
மீண்டும்
மவுசு
ஆனால்
கொழுந்தாயும்
குடிகளுக்கு
வீமோசனமெல்லாம்
இன்னும்
காகித
வார்ப்பில் தான்

கொழுந்தாயும்
காடு
தனியாரின்
சாபத்தால்
வனமாகும் நிலை
ஆழ் புதை
அறுவுக் காட்டுக்குள்



தலைக்காட்டும்
தளிர்கள்
இங்கு
மாற்றுத்தொழில்
மாடு வளர்ப்பென்றால்
அதற்காக
குழல் ஊதும்
பொறுப்பு
கண்ணனுக்குத்தான்

இக்குடிகள்
இன்று நம்புவது
மாட்டையும்
வீட்டையும்தான்.

மாடும் வீடும்
வெறும்
காகித வார்ப்பென்றால்
பின்
எல்லாமே
வனவாசம்தான்.



# வடை இழந்த காகங்கள்.

மேக துயிலை
இழந்து நிற்கும்
நிர்வாணவானம்

சூரிய பார்வையில்
காமத்தின் வெப்பம்
செம்பட்டை மயிராய்
தேயிலைச் செடியின் நிலமை

ஓசை இழந்த
ஆலைச் சங்கு
நிசப்தமான ஸ்தலங்கள்

காயும் காட்டுக்குள்
விறகு தேடும்
தாவணிகள்
பீலி நீர் வற்ற
குடத்தில்
ஆற்று நீர் சுமக்கும்
சிற்றிடைகள்

வற்றிய ஆற்றில் துணிப்
போட்டு
இரை தேடும் சிறார்கள்

எறவானந் தன்னில்
தொட்டிலாடும்
கொழுந்து கூடைகள்
இதெல்லாம் இங்கு
வறட்சியின் காட்சிகள்





மல்லிகை சி.குமார்

வறட்சி நிவாரணம்
இன்னும் இங்கு
எட்டாத தாரகைகள்

வாரம்....
வேலை கூடினால்
நாலுநாள்
மிதிநாள்.....?

தளிர் கிள்ளும்
விரல்களுக்கு
வீடுமுறையா....?

இல்லை
வேலை வேறு
தரமாட்டோம்
என்னதொரு
தண்டனையா?.

வாரம்
ஆறு நாளும்
பேரு வீழும்
வாய்கிழிய
சொன்ன தெல்லாம்
வாய்பந்தலாச்சு

'வாங்கிடுவோம்
மாதச்சம்பளம்' என்று
வரிந்து கட்டின
கோமணங்கள்
குத்துக் கல்லாச்சு

"மாற்றுவோம்
மாற்றங்
காண்போம்"
இது வலையிழுத்து
முடிந்தப் பின்னே
அறுந்து போன
வார்த்தைகள்

"தோட்டம் மாறும்
கிராமமாய்"
என்றிதெல்லாம்
ஊமைக் கண்ட
கனவுகள்

இன்று இந்த
குட்டைக்குள்ளே
ஒரு நிறத்து
எருமைகள்

எங்கள்
இதய புண்ணும்
தெரியாமல்
போடுதவை
கூத்துகள்

கூத்தைப் பார்த்து
நாங்களெல்லாம்
வடை இழந்த
காகங்கள்

நாளை
எருமைகளின்
முதுகு புண்ணை
கொத்தும்.....
வளரும் எங்கள்
குஞ்சுகள்.



# யார் இதில் நளன்?

இதை
நந்தவனமாய்
மாற்றுங்கள்
எதிர்ப்பில்லா
எதிர்ப்பார்ப்பும்
அதுதான்

அதற்காக
மொட்டுக்கள்
மலர்வதற்குள்
மாலையாக்கிப்
போட்டுக்கொள்ள
துடிக்காதீர்

நீங்களெல்லாம்
நள
மகாராஜாவாய்
ஆசனத்தில்
அமர்ந்து விட்டீர்

யார் கழுத்தில்
நான்
போய் விழுவேன்

மாலைகளும்
இன்று இங்கு
மனந்
தடுமாறுகின்றன

யார்இதில்
உண்மையான
நளன்...?

பாவம்
தமயந்தியும்
தடுமாறுகின்றாள்
இவளின்
அடுத்த
சுயம் வரம்
வரும் வரைக்கும்
நீங்கள்
ஆசனத்தைவிட்டு
அசைய மாட்டீர்தான்
அதற்குள்
நான்தான் உண்மையான
நளனென்று
தரையில்
கால் பதித்து
யாராவது
நடக்க
முற்படுங்கள்

இல்லை என்றால்
எல்லாமே
பொய் முகங்கள்
என்று
முடிவாகிவிடும்.



மல்லிகை சி.குமார்

# பஜனைக் கீதம் மாற்றி எழுதப்படும்

பனியில் குளித்து
காலைக்
கதிரொளியில்
தலைத் துவட்டும்
புல் வெளியில்
நீ நடக்க
உன்
பாதம் பட்டு
வளைந்த புல்
மீண்டும் நிமிரும்!

ஆனால்
நீயோ...
என்றோ
வளைந்தாய்
இன்னும்
நிமிரவில்லையே?

இம்
மார்கழி பனியில்
வைகறைப் பொழுதில்
என் வாசலில்
உன்
பஜனைக் கீதம்
ஒலிக்கிறது
புலரும் பொழுதில்



உன்
கோவிந்தா! கோஷம்
என்னை எழுப்பும்
ஆனால் நீயோ....
தூக்கத்தில் அல்லவா
நடந்து கொண்டே
திருப்பள்ளி எழுச்சி
பாடுகின்றாய்

உன்
கோவிந்தா! கோஷம்
மலையை முட்டும்
ஆனால்
உன்
தலையை
தடவிய
நரிகளால்
உன் வாழ்க்கையே
இங்கு
கோவிந்தா!
கோவிந்தா!
ஆகிவிட்டதே!

உன்
நித்திரைக்கு
நீ கொஞ்சம்
விடுமுறை விடு
மிதிபட்ட புல்
மீண்டும்
நிமிர்வதைப் பார்
பஜனைக்
காலத்தில் மட்டும்



நீ உன்
நெற்றியில்
நாமம்
போட்டுக் கொள்கிறாய்
ஆனால்....
காலமெல்லாம்
உனக்கு நாமம் போட்டு
தன் நாமத்தில்
பல கணக்கை
சேர்த்தவர்கள்
உன்
உறவுகளின்
எலும்புக்
குவியலுக்கு மேல்
'திருப்பணித் தொண்டு
செய்தோம்
உனக்கென்று'
கல்லில் தங்கள்
பெயர் வெட்டி
சரித்திரத்தில்
கால் ஊன்ற
முயல்கின்றனர்.

நிச்சயம்
அழிக்கப்படும்
அந்த எழுத்தை
திரும்பிப் பார்!
உனக்குப் பின்னால்
எத்தனை எத்தனை
கோவிந்தன்களும்
லச்சுமணன்களும்
ஏன்



ஏப்ரஹாம்களும்
மீண்டும் - இங்கே
எழும்பிக்
கொண்டிருப்பதால்
அந்த
பொய்யர்களின்
நாமம்
அழிக்கப்படும்.

உன்
தியாக வரலாறு
அதில்
தீட்டப்படும்
வளைந்த
நீ
நிச்சயம்
நிமிர்வாய்
இப்போது
நீ பாடிய
பஜனைக் கீதம்
மாற்றி.....
எழுதப்படும்!

அது... உன்
எழுச்சிக்
கீதமாய்
எங்கும் ஒலிக்கும்





மல்லிகை சி.குமார்

# இன்று ஒரு சபதம் எடு

தோழியே......
இங்கு
சிம்மாசனத்தில்
அமரும் அனைவருக்கும்
நீயே மதில் கல்

சொல்வாக்கை கொட்டி
உன் வாக்கை பெற்று
பட்டம்
சூட்டிக்கொள்ளும்
இந்த ராமர்கள்
கால்பட்டா
உனக்கு
விமோசனம்
வந்துவிடப்
போகிறது?

ஒவ்வொரு
மே தினத்திலும்
அவர் வாழ்க.....!
இவர் வாழ்க.....!
என
அடுத்தவன் வாழ
கோஷம் போடும் நீ
உனக்காக
உன் வாழ்வு உயர
ஒரு தரமேனும்
குரல்
கொடுத்ததுண்டோ?

இந்த மேதினத்திலாவது



அந்த சபதத்தை
முன்வை!

உனக்காக
நீயே ஒரு தரம்
கூவிப் பார்.

அதற்காக
பாஞ்சாலியாய்
கூந்தலை
அள்ளி முடியாமல்
இருந்து விடாதே
ஏனென்றால்
உன்
கூடைக்கயிறு
அழுத்தி..... அழுத்தி
உன் கூந்தல்
எவ்வளவோ
குறைந்து விட்டதே!
அடியே

உன் கூடைக்
கயிருக்குத்தான்
என்ன வீராப்பு
சூடு போட்டது போல்
உன் இரு பக்க
தோள் பட்டையிலும்
தழும்புகள்
ஏற்படுத்தி விட்டதே
அந்த கயிறு.

ஆனால் நீயோ
உனக்காக



உன் விடிவுக்காக
கூவ அஞ்சுகிறாயே?
பாரடி....?
இந்த தேசத்தில்
பலபேர்
உன் உழைப்பால்
தங்கள், தங்கள்
வாரிசுகளின்
மேனிக்கெல்லாம்
தங்கத்தை
பூட்டி
அழகு பார்க்க....
நீயோ
வெளுத்துப்போன
தாலிக் கயிற்றுக்கு
முலாம் பூச ஒரு
மஞ்சள் துண்டுக்கு
அலைகிறாயே!
அடியே...
ஆண்டாளாவது
சூடிக்கொடுத்தாள்
ஆனால் நீ-
கிள்ளி எடுத்த தேயிலைக்
கொழுந்தில்
சுவையாக
ஓர வாய் தேநீராவது
குடித்ததுண்டா?
ஏய்! தேயிலைச் சந்தையில்
நீ தளிர் கிள்ளும்
வண்ணப்படம்
எவ்வளவு பெரிய
சட்டத்திற்குள்



அழகாக இருக்கிறது
தெரியுமா?
இங்கு நீயோ...
தோள் பட்டை
கிழிந்த
ரவிக்கைக்கு
ஒட்டுப்போட
ஒரு துண்டு துணிக்கு
அலைகிறாயே?
இந்த மேதினத்தில்
" அந்த மேடையில்"
கொழுந்து
மாலைக்காக
கழுத்து நீட்ட
எத்தனையோ பேர்
உண்டு.
இதில் யாரடி
ஒரு பூவிதழையாவது
கிள்ளிப் போட்டு
உனக்காக
புகழ் பாடப்
போவது?

எனவே
என் தோழியே...!
இந்த
மே தினத்திலாவது
இந்த சபதத்தை
முன்வை..!
உனக்காக
உன் விடிவுக்காக
நீயே கூவ
சபதமெடு.



# கோலங்கள் மாறும்

தைமகளே
உன்
வரவுக்காக
இந்த
லயத்து வாசலில்
எத்தனை
கோலங்கள்

உன்
வரவுக்காக
வாசலில்
கோலமிடும்
அந்த
விரல்களில்தான்
எத்தனை
வெடிப்புக் கோலங்கள்

கால்பட்டோ
மழை நீர் பட்டோ
கரையும்
மாக்கோலமல்ல
இவைகள்
நிரந்தரமாக்கப்பட்ட
கல் வெட்டுக்கள்
வெடிப்புற்ற
விரல்கள்.

குன்றுகளில்
தேயிலைக்
கன்றுகளை



புள்ளிகளாய்
நட்டு வைத்து
ரத்தமும்
வியர்வையும்
கசிய
இவர்கள் போட்டக்
கோலத்தால்தான்

இன்று
யார் யாரின்
வாழ்க்கை எல்லாம்
அலங்காரத் தேராக
ஆக்கப் படுகின்றது
ஆனால்...

இவர்களுக்கு
மட்டுமேன்
இன்னுமிந்த
அலங்கோல
வாழ்க்கை?

இவர்கள்
கோலம் போடும்
வாசல்கூட
இவர்களுக்கு
சொந்தமில்லை
இதில்
வீடு எப்படி
சொந்தமாகும்?



மேடைகளில்
அலங்காரத்தனமாய்
அன்பாய்
ஆவேசமாய்
உணர்ச்சிப் பொங்க
வார்த்தைகளால்
கோலம் போட்டு
ஓட்டுக் கேட்டோர்

இவர்கள்
போட்ட
கத்திரிக் கோலத்தால்
கதிரைப் பிடித்து
பட்டு
மெத்தை மேல்
மெத்தை
தேடிக் கொண்ட
புள்ளிகள்

இவர்கள்
நிலைமாற
ஆற்றியது என்ன?

ப்பூ
அவர்கள் எல்லாம்
கதிரைக்கெனப்
போடப்பட்ட
ஊமைக்
கோலங்களேதான் !



தைமகளே
குன்றுகள்
தோறும் தேயிலை
கன்றுகளை
புள்ளிகளாய்
நட்டு வைத்து
ரத்தமும்
வியர்வையும்
கசிய
கோலமிடும்
கரங்களெல்லாம்
ஒன்றிணைந்தால்
இந்த
அலங்கோல
நிலைமாறும்
சுரண்டும்
அதிகார
குடைசாயும்

வார்த்தைகளால்
மேடையிலே
வாக்குக்காய்
கோலமிடும்
புள்ளிகளெல்லாம்
மழைநீரில்
கரைந்துவிடும்
மாக்கோலமாய்
மறைந்திங்கு
புதுக் கோலம்
தான்பிறக்கும்



# இந்த ஆடுகள் நனைய......

உங்களால்
நாங்கள்
இன்று
களப்பலி
ஆடுகளாகி விட்டோம்.

இந்த
ஆடுகளின் மீது
அடிமை சாசனம்
எழுதியதும்
நீங்களே

அதனால்
நனைக்கப்
பட்டு விட்டோம்
நாங்கள்
நனைவதைப்
பார்த்து
இப்பொழுது
எதற்காக
நீலிக் கண்ணீர்
வடிக்கின்றீர்கள்?

மலைகளில்
மேயும்
இந்த ஆடுகளின்
கண்ணீரையும்
விற்று காசாக்கி
பன்னீர் வாங்கித்
தெளித்துக்கொள்ளும்.



நீங்கள்
எங்களின்
கழுத்துக் கயிறை
கசாப்புக்காரன்
கையிலல்லவா
கொடுத்து விட்டீங்க

உங்களில்
சிலர்
தங்களின்
வரண்ட தலைக்கு
எங்களின்
உரோமத்தால்
தொப்பி
போட்டுக்கொள்ள...
நீங்களோ
எங்கள்
அனைவரின்
வாழ்க்கைக்கும்
தொப்பி
போட்டுவிட்டீர்கள்!

ஆடுகளாக்கப்பட்ட
எங்கள் கழுத்துக்கு
நீங்கள்
கயிறு
திரித்த போது
மணி கயிறென்று
சந்தோசப்பட்டோம்
ஆனால்
தற்பொழுது
தெரிகிறது
எங்களை
களப்பலிக்கு
இழுத்துச்செல்ல
பயன்படுவதே
நீங்கள் திரித்த
கயிறுதான் என்று!

நாங்கள்
உங்களை
எங்கள்
மேய்ப்பனாக
தேர்ந்தெடுத்த
பாவத்தை தவிர
வேறு பாவம்
அறியோம்

அதற்காக
எங்களை
பலியாடாய்
பிரகடனப்
படுத்தி விட்டீர்களே!
இன்றோ
நனைகின்ற
எங்களுக்காக
ஏன் இந்த
நீலிக் கண்ணீர்?

எங்கள்
கழுத்தில்
கத்திவிழும் முன்
முயன்று
பார்க்கின்றோம்....
உங்களால்
முறுக்கப்பட்ட
கயிறு
அறுபடுமா என்று!




மல்லிகை சி.குமார்

# நரியும் காகமும்

நரிகளே
நீங்கள்
காட்டும்
ஒவ்வொரு
ஆசை
வார்த்தையிலும்
இவர்கள்
மயங்கியே
விடுகின்றனர்

தேர்தல்
சுயவரத்தில்
உங்கள்
சின்னங்கள்
மாப்பிள்ளையாக
நிற்கும் போதெல்லாம்
எப்படிதான்
இவர்களின்
கத்திரி மாலைகள்
கணக்காக
விழுகின்றதோ?

அன்று ஒரே
ஒரு நரியிடம்
ஒரே ஒரு காக்கை
ஒரே ஒரு
தரம் மட்டுமே
ஏமாந்து போனது!

ஆனால்
இவர்களோ
ஒவ்வொரு
தேர்தல்
திருவிழாவிலும்
மயங்கி
ஏமாந்து
தங்கள்
வாழ்க்கையே
உங்களிடம்
இழந்து
விடுகின்றார்களே!

அந்த நரியின்
ஆசை
வார்த்தையால்...
வாய் வடையை
இழந்தது காகம்
இவர்களோ
உங்கள்
வாய் மொழியால்
தங்கள்
வாக்கையே
உங்களுக்காக
நழுவ
விடுகின்றார்களே!

இன்னும்
எத்தனை
காலத்திற்கு
உங்கள்
பொய்ப்பந்தல்
இங்கே
நிலைக்கப்
போகின்றதோ?





தேயிலைக்கு பசுமையையும்
தேநீருக்கு சாயத்தையும் தந்த
மக்களின் மைந்தன்
மல்லிகை சி.குமார்.

தேயிலைக்காடுகளும் மலைமுகடுகளும்
இந்த வானம் பாடியின் உலகமாகும்.
அந்த உலகத்து மனிதர்களின்
யதார்த்தங்களை வெளிச்சத்திற்கு
கொண்டு வந்தவர் குமார்.

கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம்
என்று தன் ஆளுமையை
சமூகப்பார்வையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.
இவரது கந்தக வரிக்கவிதைகள்
பொய்முகங்களை இனங்காட்டியுள்ளன.

மலையக மக்களின் பிரச்னைகளைப் பற்றி
இவர் தீட்டிய ஓவியங்கள்
ஜெர்மனியில் நடைபெற்ற
கண்காட்சியில் இடம் பெற்றன.

மானுடத்தை தன் எழுத்துக்களால்
படம் பிடிக்கும் மல்லிகை சி.குமாரின்
எழுத்துக்கள் காலக் கண்ணாடியாகும்.

அந்தனி ஜீவா
ஆசிரியர் ''குன்றின் குரல்''